

முத்தமிழறிஞர் பதிப்பகம் சார்பில், தி.மு.க. 75 அறிவுத்திருவிழாவில் வெளியிடப்பட்ட 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று நேரில் வழங்கினார்.



தி.மு.கழகத்தின் 75 ஆண்டுகால பன்முக நோக்கில் விளக்கும், 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூல் வெளிவர உறுதுணையாக இருந்த திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்களை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். கழக வரலாற்றில், இப்படி ஒரு ஆவணம் இதுவரை வெளிவந்ததில்லை என்று பாராட்டிய அவர், அடுத்து மேற்கொள்ள வேண்டிய பணிகளைச் சுட்டிக்காட்டி ஆலோசனைகளும் வழங்கினார்.



`காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூல் ஆலோசனைக் குழு உறுப்பினர்களுள் ஒருவராக செயல்பட்டு, நூல் சிறப்புற வெளிவர காரணமாக இருந்த மூத்த பத்திரிகையாளர் விஜயசங்கர் அவர்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். எவ்வகையில் எல்லாம் இந்நூல் தனித்துவமானது என்பதை எடுத்துக்கூறிய அவர், கழகத்தின் அறிவுச் செயல்பாடுகளுக்கு எப்போதும் துணை நிற்பதாக உறுதியளித்தார்.

### விவசாய நலனுக்காக

# பயிர்க் காப்பீடு செய்யும் தேதியை நவ.30-க்கு நீட்டித்திடுக!

### முதல்வருக்கு – கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் கோரிக்கை!

*சென்னை, நவ.13-*

*விவசாய நலனுக்காக பயிர்க்காப்பீடு செய்யும் தேதியை நவம்பர் 30க்கு நீட்டித்திடுக என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலக சங்கம் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*இதுகுறித்து கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் தமிழ்நாடு சார்பாக மாநில பொதுச் செயலாளர் இரா.அருள்ராஜ் விடுத்துள்ள அவசர கோரிக்கை வருமாறு:-*

*பாரத பிரதமர் மந்திரி பயிர் காப்பீடு திட்டம் 2025-26 நடப்பாண்டிற்கு ராபி சிறப்பு பருவத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நெல் பயிர் உள்ளிட்ட 11 பயிருக்கு காப்பீடு செய்ய நவம்பர் 15-ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.*

*தீபாவளி மற்றும் ஆயுத பூஜை விடுமுறை காரணங்களாலும், தொடர் மழையின் காரணங்களாலும், கிராம நிர்வாக அலுவலர்களாகிய நாங்கள் எஸ்.ஐ.ஆர். பணியில் ஈடுபட்டு வருவதாலும் பல விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய முடியாமல் சிரம ப்பட்டு வருகின்றனர்.*

*ஒரு நாட்டின் முதுகெ லும்பானவர்கள் விவ சாயிகள். விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் விவசாய நலனுக்காக பயிர் காப்பீடு செய்யும் தேதியை நவம்பர் 30-க்கு நீட்டிக்கு மாறு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு சார்பாக பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

### காவல்துறை சார்பில் - ரூ.12 கோடியில்

# பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய 80 இளஞ்சிவப்பு வாகனச் சேவைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, நவ.13-**

**காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக மாநகரங்களின் பயன்பாட்டிற்காக ரூ.12 கோடி செலவில் 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்களின் சேவைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.11.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக, மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 12 கோடி ரூபாய் செலவில் 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டுதல், பாதுகாப்பு பணிகளுக்காக வாகனங்களை கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 2025 2026ஆம் ஆண்டு காவல்துறை மானியக் கோரிக்கையில், பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் 12 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, அவ்வாகனங்களின் பயன்பாட்டினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள், தாம்பரம், ஆவடி, சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை மாநகரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ரோந்து பணி மேற்கொண்டு பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் தனிக்கவனம் செலுத்த ஈடுபடுத்தப்படும்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குனர்/படைத் தலைவர் க.வெங்கடராமன், காவல் துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


